# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

# DEPOSITION OF WITNESS

# O.S.308/2018

# CNR.No.TNCB19000

Date: 11.12.2024 PW1

| பெயர் | இந்திராணி | வயது | 62 |
|---|---|---|---|
| க/பெ | சுப்பிரமணியன் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | பட்டக்காரம்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 11th December 2024. வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

**2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

மாதைய்ய கவுடரின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் என் தாத்தா ரங்கப்ப கவுடருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான் . ரங்கப்ப கவுடருக்கு மாதைய்ய கவுடர், காரமடை கவுடர் ஆகிய இருவர் வாரிசுகள் என்றால் சரிதான். ரங்கப்ப கவுடர் நான் பிறப்பதற்கு முன்பே இறந்து விட்டார் . எனக்கு தற்போது 62 வயது ஆகிறது. எனக்கு 1979 ம் ஆண்டில் திருமணம் ஆனது. ரங்கப்ப கவுடருக்கு பின்னிட்டு தாவா சொத்தை அவரது ஆண் வாரிசுகளான மாதைய்ய கவுடர் மற்றும் காரமடை கவுடர் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான்.

மாதைய்ய கவுடர் இரும்பொறை கிராமத்தில் க.ச.எண்.849 ல் 2.98-1/2 ஏக்கர் பூமியை கிரையம் பெற்றார் என்றால் கூட்டுக்குடும்பமாக இருந்ததாலும் காரமடை கவுடர் இளவராக இருந்ததால் மாதைய்ய கவுடரான எனது அப்பா பெயரில் ஒரே நாளில் கிரையம் வாங்கினார். நான் 1962 ம் ஆண்டில் பிறந்தேன். 1959 ல் கிரையம் பெற்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. வா.சா. ஆ. 2 ஆவணம் மாதைய்ய கவுடர்பெயரில் வாங்கிய சொத்து அவர் சுயமாக வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஒரே நாளில் வாங்கப்பட்டது. வா.சா. ஆ. 2 ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. அதைப் படித்து பார்க்காததால்

அதில் உள்ள விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

க.ச.எண்.849 ல் உள்ள சொத்து தற்போது யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் என் சித்தப்பா வகையறா அனுபவத்தில் உள்ளது. க.ச.எண்.849 ல் கண்ட சொத்தை காரமடை கவுடரும் தாவா சொத்தை மாதைய்ய கவுடரும் அப்போதே வாய்மொழியாக பாகம் பிரித்து வைத்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து, மற்றும் க.ச.எண்.849 ல் உள்ள சொத்துக்குண்டான வருவாய் ஆவணங்களை பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இருந்ததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா இல்லை பொதுவாக உள்ளது.

நான் 1979 ல் திருமணம் ஆகி பட்டடக்காரம்பாளையத்திற்கு சென்றேன். எனது சகோதரி சுப்புலட்சுமிக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் எனக்கு முன்பாக 4, 5 வருடங்களுக்கு முன் திருமணம் ஆனது. அவர் செங்கப்பள்ளி கிராமம் வாக்கணாங் கோம்புக்கு சென்றார். நாங்கள் வங்கியில் கடன் வாங்கும் போது பட்டா , சிட்டா ஆகியவைகள் யார் பெயரில் இருந்தது என்றால் முதலில் என் அப்பா பெயரில் இருந்தது எப்போது என் அண்ணன் பெயரில் மாறியது என்று எனக்கு தெரியாது. வா.சா. ஆ. 4 ஆவணத்தை பற்றி எனக்கு விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்களை வங்கியில் ஒப்படைத்தோம் என்றால் சரிதான்.

அப்போது 1ம் பிரதிவாதியின் பெயரில் பட்டா,சிட்டா , அடங்கல், கிஸ்து ரசீது, மற்றும் வீட்டு ரசீது , ஆகியவை இருந்தது என்றால் ஆமாம். ஒரு ஆள் பெயரில் இருக்கவேண்டும் என்று சொன்னதால் அதை நம்பி நாங்கள் கூட சென்று வாங்கினோம். முத்துச்சாமி பெயரில் வருவாய் ஆவணங்கள் எப்போது மாற்றப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா. ஆ. 4 ஆவணத்தில் 7 வது பக்கத்தில் 5-வது ஆவணமாக ஒப்படைக்கப்பட்ட வரவு செல் ரசீது எண். 564/2006 ஆவணத்தின் மூலம் ஏற்கனவே 1ம் பிரதிவாதி காரமடை கோ-ஆபரேடிவ் வங்கியில் கடன் வாங்கி அடைத்திருக்கிறார் என்றால் சரிதான்.

1ம் பிரதிவாதி ஏற்கனவே கடன் வாங்கியதில் வாதிகளாகிய நாங்கள் கையொப்பம் செய்யவில்லை என்றால் எனது அப்பா வாங்கியதால் நாங்கள் எல்லோரும் சேர்ந்து அடைத்தோம். எனக்கு படிக்க தெரியும். ஆனால் தற்போது கண்ணாடி கொண்டு வரவில்லை.

( வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.